J. R. T. S.] GENERAL SERIES. No. 44.

# RENUNCIATION OF EVIL WAYS,

OR AN

## ACCOUNT OF PHILIP P. OF BIRMINGHAM.

[A Tract of 16 Pages, is a translation of the Parent Society's Tract, Philip P. of Birmingham, and is also one of the publications of the American Tract Society.]

# துன்னெறி விலக்கு.

இங்கிலாந்து தேசத்திலிருக்கும் பிலிப்பியென்கிற ஒருவன் தான் நடந்துகொண்ட வர்த்தமானங்களைத் தன் சுயவாக்கினாலே பிரசித்தம் பண்ணியது.

பேறமிங்கம் என்னும் நகரிக்கு அருகான ஒரு ஊரில் நான் பிறந்து வளர்ந்து பிராயமான காலத்திலே எனது பிதா என்னை வேலை பழகுகிறதற்கு ஒரு தொழிலாளியிடத்திலே ஒப்புவித்தார். அவன் கீழாக நான் இருந்து வேலை பழகுகிற நாளிலே நல்லொழுக்கமும் நற்சீருமுடையவனாய் நடந்தேன். அதைக் கண்டு அந்தத் தொழிலாளி என்மேல் அதிக மனப் பூரணங்கொண்டவனாய் என்னைப் பார்த்து நீ தொழிலை நடப்பிக்கிறவனாகும் பொழுது உனக்கு உதவியுள்ளவனாய் இருப்பேனென்று இடையிடையே சொல்லுவான்.

நான் எப்பொழுதும் நன்மையிலே சகிக்க வேண்டுமென்ற அதிக விருப்பத்துடனே என

3d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1844.

க்கு நல்ல புத்திகளைச் சொல்லி வரும் என் பிதா மாதாவுக்கு நான் நடந்த இந்த நல்லொழுங்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறதாய் இருந்தது. இப்படியே அந்த வேலையைப் பழகக் குறித்த எல்லை பின்னிட்டதின் மேற் சிலகாலம் ஒரு வேலைக்காரனாகத் தொழிற் செய்து முன்னையிலும் அதிக பணம் என் கையிற் பிடித்துக் கொண்டேன். இன்னும் இரவிலே தொழிலாளிகளில் அநேகர் வாடிக்கையாய்க் கூடிக் குடித்துக் களித்துக் கொண்டாடிப் புதினக் கடிதாசிகளையும் மற்றும் பலபல நூதன காரியங்களையும் வாசித்துப் பேசிப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கும் ஒரு இடத்துக்குப் போக வரத்தொடங்கி அவர்களுடனே சேர்ந்து அவர்கள் எடுத்துப் பேசுங் காரியங்களுக்கு இசைவாகப் பேசுவேன்.

இப்படி நாளிலே பலபல காரியங்களையும் பேசிப்பேசி வந்து ஒருநாட் சுவிசேஷத்துக்கு எதிரிடையான பொய் நியாயங்களை எழுதிய ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து வாசிக்கவும் முன் மூகனையிலே அது எனக்குப் பிரியமில்லாதிருந்தது. பின்பு கேட்கக் கேட்கப் புத்தி மயங்கி அதிலே சொல்லப்பட்ட விபரீதமான நியாயங்களை எல்லாம் ஆராய்ந்து பாராமற் சரியென்று ஒத்துக்கொண்டேன். மேலும் நான் என் இச்சைப்படி நடப்பதற்கு அந்த வேதம் ஒரு தடையாய் இருந்ததினாலே அது பொய்யாய் இருந்துவிடுவது என் மனதுக்கு அதிக விருப்பமாயிருந்தது. அந்த விருப்பம்

அந்தப் புத்தகத்திலே சொல்லிய பொய்நியாயங்களையும் ஒத்துக்கொள்வதற்கு என் மனதை எவிவிட்டது. சிலவேளை இந்தக் கிறிஸ்து வேதம் மெய்யாய் இருக்கக்கூடுமென்றெண்ணுவது என் மனதுக்கு மிகுந்த பயங்கரத்தைக் கொடுப்பதாயிருந்தது. இப்படியிருக்கையில் ஒருதரஞ் சாவது பிழைப்பதான பெரிய ஒரு வியாதி வந்து கிடந்தேன். அப்பொழுது மிகவும் அதனமாக இந்தப் பயம் என் மனதிலே பிடித்தது இந்த வேதம் மெய்யாயிருக்குமேயாகில் இப்படியே இந்நேரம் நான் இறந்துவிட்டால் என்றென்றைக்கும் நிற்பந்தமுள்ளவனாய் இருப்பேனே என்று மிகவும் வியாகுலப்பட்டேன். ஆனாலும் என் பொல்லாத கூட்டாளிகள் வந்து என்னைப் பரிகாசம்பண்ணி நான் எண்ணின அந்த நல்ல எண்ணத்தை என் மனதிலே இல்லாமற் பண்ணிப்போட்டார்கள்.

நானுஞ் சுகப்பட்டு எழும்பின பின் முன்னையிலும் அதிக அழிப்பாளியுங் கெட்டவனுமாய் நடந்து வேலை முயற்சியையும் விட்டதினாற் பெரிய மூட்டாளியாய்ப் போனேன். அதினாலே நான் என் கூட்டாளிகளில் ஒருவனுக்கு என்னுடைய இலம்பாட்டைச் சொல்லி அவனுடைய புத்தியையுங் கேட்டுக்கொண்டு கள்ளப் பணம் மாறுகிறவர்களுடனே கூடி அந்தப் பணங்களை வாங்கி மாறத் தொடங்கினேன். அவர்களும் என்னை அந்தக் காரியத்துக்கு நம்பிக்கைகாரனென்று கண்டு கள்ள நோட்டுக்களையுந் தருவார்கள். இப்படியே கள்ளப்பணங்களையுங் க

ள்ள நோட்டுக்களையும் வாங்கிக்கொண்டு போய் மாறுகிற இடங்களில் அதிக எண்ணிக்கையாய் நடந்தாலும் மோசங்களிலும் அகப்பட்டு அரிதாய் விலகிக்கொண்டதும் உண்டு.

அப்படி மோசத்தில் அகப்பட்ட நாட்களிலே பயத்தினாலே அடுத்தடுத்து நித்திரையின்றி இருக்கிற இரவுகள் அநேகம். இந்த இரவுகளில் என்னை அறியாமல் அயர்ந்து நித்திரையானாலும் கனவிலே சேவகர் என்னைப் பிடித்துக்கொண்டு போய் மறியலிலே வைக்கிறதாகவும் நீதித்தலத்திலே விட்டு விளங்கிக் குற்றவாளியாய்த் தூக்கிப்போடத் தீர்த்துத் தூக்கு மரத்தடியிலே கொண்டு போய்க் கழுத்திலே கயிறுபோட்டுத் தூக்குகிறதாகவுங் கண்டு சடுதியாக ஏக்கத்துடனே கண்ணை விழித்து இது கனவல்லோ என்று என்னிலே மகிழுகிறதுமுண்டு. என் முகம் பேதலிப்பதினாலுங் கை பதறுவதினாலும் என்னுடைய மனக் கலக்கம் மிகுதியுந் தோன்றத்தக்கதாய் இருக்கும். என் கூட்டாளிகளில் ஆராகிலும் பிடிபட்டு நீதித்தலத்திற் கொண்டு போகப்படும்பொழுது அவர்கள் என்னுடைய கள்ளத்தையுங் காட்டிக் கொடுப்பார்களோ தெரியாதே என்று மிகவும் பயப்படுவேன். இனிமேல் இப்படியான பொல்லாங்குகளை விட்டு நேராக என் வேலைகளைச் செய்து பிழைக்கவேண்டுமென்று இடையிடையே என் மனதில் எண்ணினாலும் நெடுநாளாகச் சோம்புத்தனத்திலுந் தீமையிலும் பழகினதினால் அந்த எண்ணம் நிலைக்கவில்லை. அந்தப் பொ

ல்லாத கூட்டாளிகளை எலவே விட்டு விலகினால் இந்தத் தீமையான நடத்தையிலே நான் தலைப்பட மாட்டேன். அவர்களுடைய சாவகாசத்தை விட்டு விடாமல் இருந்ததினால் இப்படிக் கேடான நடப்பு என்னிடத்தில் உண்டுபட்டது.

துஅாஉ ஷ௰ முகனையில், மறுபடியும் தேவகாரியங்களைச் சிந்திக்கத் தொடங்கினேன். விசேஷமாக ஒரு நாள் இந்தக் கிறிஸ்து வேதத்திற் சொல்லப்படுங் காரியங்கள் உண்மைதானென்கிற ஒரு எண்ணம் என் மனதிற் புகுந்ததினாலே இனி அதைத் தள்ளாமற் புத்தியுடனே அதின் உண்மைகளை ஏற்றுக் கைக்கொண்டு நடக்கவேண்டுமென்று நிச்சயித்தேன். அந்த நாட்களிலே ஒரு திங்கட் கிழமை குற்றவாளிகளைத் தூக்குகிறதாயிருந்ததினால் நானும் பார்க்கப் போய் அவ்விடத்தைக் கிட்டினவுடனே பயத்தினாற் கால் தடுமாறச் சொல்ல முடியாத ஏக்கம் மனதிலே பிடித்துக் கையினாலே மார்பிலே அடித்து ஆண்டவர் பாவியாகிய என்மேலும் இரக்கமுவாராக. நானும் இந்தத் தூக்கு மரத்திற்கு ஏற்ற குற்றவாளியாய் இருந்தும் இவர்களுடனே தூக்கப்பட்டுச் சாகாமற் பிழைத்திருப்பது அவருடைய இரக்கந்தானென்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். அந்தத் தூக்கிற காரியம் நடந்தபின் துக்கத்தினால் மனம் மிகவும் ஒடுங்கி வீட்டுக்குப் போகையில் கள்ள நாணயங்கள் தருகிற எனது கூட்டாளிகளில் ஒருவன் எனக்குப் பின் தொடர்ந்து வந்து என்னைக் கிட்டினவுடனே நாம் பரிமாறுகிற பொ

ருள் எதுந் தேவையோ என்று கேட்டான். அதற்கு நான் தேவையில்லை. எனக்குக் கிடைத்தது போதும். அளவுக்கு மிஞ்சப் பெற்றுக்கொண்டேன். அந்தத் தொழில் இனி ஆகாது. நீயும் அதை விட்டுவிடு என்று அவனுக்கும் புத்தி சொன்னேன். அவனும் நான் சொன்னதை மிகுந்த அமைதியுடனே கேட்டு அதை விட்டுவிடுவது நன்மையாய் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு போனான். நானும் வீட்டுக்கு வந்தவுடனே ஐம்பது பவுண்டுக்கு மேற்பட வைத்திருந்த கள்ள நோட்டுக்களையெல்லாம் எடுத்துச் சுட்டுப்போட்டு வேதபுத்தகத்தை எடுத்துத் திறந்து வாசித்தபொழுது ஆகாதவன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கருத்தரிடத்துக்கு மனந் திரும்பக்கடவான். அப்பொழுது அவன் மேல் மனதுருகுவார் என்னும் வாக்கியம் என் மனதிலே பதிந்தது. அதுவே குணப்படுவதற்கு என்னை மிகவுந் தைரியப்படுத்தினது. அன்று முதல் என் வேலைகளைச் செய்யத் தொடங்கி நேராய் நடந்ததினால் நெடுநாளாகக் காணாத சந்தோஷத்தைக் கண்டேன். அதன் பின் தேவாராதனை நடக்குஞ் சமயங்களிற் கோவிலுக்கும் போவேன். அங்கே முதல்முறை போதகர் கருத்தரவை வேண்டுதல்பண்ணும் விதத்தையும் அதின் காரியங்களையும் அதினால் வரும் பலனையும் எடுத்து விரித்துப் பிரசங்கிக்கும்பொழுது பாவப் பொறுத்தலே வேண்டுதல் செய்கிறவர்களுக்கு உடனே கிடைக்கும் பலனென்

ருஞ் சொன்னார். அப்பொழுதே பாவப்பொ
றுத்தல் எனக்கும் வேண்டியதாயிருக்கிறதெ
ன்பதை அதிகமாக உணர்ந்து அதைத் தேடி
வீண் போகாமல் மனப் பூரணமாய் இயேசுக்
கிறிஸ்துநாதர் தமது திரு இரத்தத்தைச் சிந்தி
னதினால் உண்டான மீட்பைப் பற்றிக்கொண்டு
என் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றேன்.
நெடுங்காலமாகப் பாழிலே போட்டு வைத்த
வேத புத்தகத்தை வாசிக்கிறதற்கு எடுத்துத்
தொடக்கம்பண்ணிச் சுவிசேஷ காரியங்களைப்
புதுக் கண் பெற்றவனைப்போலவே கண்டு அது
கருத்தாவுக்கு ஏற்ற மகா உண்மைகளைக் கொ
ண்டதாய் அவரால் அருளப்பட்டதென்று அ
றிந்தேன். ஒரு சாயங்காலம் என் வசத்திலிருந்
த வேதத்திற்கு எதிரிடையானபலபல புத்தகங்
களையுஞ் சுட்டுப்போட வேணுமென்று எடுத்
து நெருப்பில் இடும்பொழுது இந்தக் கிறிஸ்து
மார்க்கத்திற்கு எதிரிடையானவைகளெல்லாம்
இப்படியே அழிந்து போக வேண்டுமென்று
மன உண்மையுடனே கருத்தாவை நோக்கி வே
ண்டுதலுஞ் செய்தேன். நாள்தோறும் வேத
புத்தகத்தை வாசித்துக் காலைமாலைகளில் என்
வீட்டாரையுங் கூட்டி வைத்து அவர்களுக்காக
வும் வேண்டுதல் செய்யத் தொடங்கினேன். ப
டிப்பில்லாமல் இலச்சை கேடாக வளர்ந்த என்
பிள்ளைகளை ஒரு ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்
கூடத்திற்கு அனுப்பினேன். அங்கே அவர்கள்
பரிசுத்த வேத வாக்கியங்களை வாசிக்கவுங் கருத்
தாவுக்குப் பயந்து நடக்கவும் பயின்றுகொண்

டார்கள். துன்மார்க்கமாய் நடந்த நாட்களி
லே பட்ட பலபல கடன்களை இறுத்துப்போ
டவேண்டுமென்றும் எண்ணி வேலையிலே கன
முயற்சியுஞ் சாப்பாட்டிலே ஒறுப்புமாக நட
த்து வந்தேன். தேவ ஆசீர்வாதத்தினால் அந்த
ஒறுப்பெல்லாம் நன்மையாகப்பட்டு இனிமை
யுந் தித்திப்பும் உடையதாயிருந்தது. இம்மை
மறுமை இரண்டுக்கும் நன்மைபயப்பதான
தேவபத்தி எவ்விதத்திலும் பிரயோசனமுள்ள
தாயிருக்கிறதே என்னும் வாக்கியத்தின் மெய்
மையையுங் கண்டேன். என்னாலே நட்டப்ப
ட்ட எவரெவருக்கும் அந்த நட்டத்தை இறு
த்துச் சரிக்கட்டவேண்டுமென்று தீர்மானித்
து இயன்றமட்டும் அப்படிச் செய்து வந்தேன்.

இப்படி ஆறுமாதம்போலே நடந்து வரு
கையில் என் மனதிலே மிகவுந் தைக்கிறதாக
நடந்த ஒரு காரியத்தைச் சொல்லுகிறேன். அ
தென்னவெனில் தூக்கும் இடத்தினின்று நான்
வரும்பொழுது என்னை வழியிலே வந்து கூடிப்
பேசின அந்தக் கூட்டாளி கள்ள நோட்டுக்கள்
மாறின இடத்திற் சிலர் கண்டு பிடித்ததினால் ம
றியலில் வைத்து நீதிச் சங்கத்தில் விட்டு விளங்
கிச் குற்றவாளியென்று கண்டு பெரிய கள்வனு
னதிலே தூக்கிப்போடத் தீர்மானமாயிற்று.
பின்பு அவன் ஒரு காகிதம் எனக்கு எழுதினான்.
எப்படியெனில்,

எனது அன்புள்ள சிநேகிதன் அறியவேண்டி
யது என்னுடைய காரியம் இப்படி ஆக்கினைக்
கிடாகத் தீர்க்கப்பட்டது. என் சீவன் இனித்

தப்ப வழியில்லை. நீர் முன்னே எனக்குச் சொன்ன நல்ல புத்திகளை நான் கேட்டு நடந்தேனேயாகில் இப்படிக் கொடுமையான காரியம் எனக்கு வரமாட்டாது. இது என்னுடைய ஆத்தும சரீரம் இரண்டுக்கும் உபத்திரவம் வருவிப்பதாயிருக்கின்றது. நான் இருக்கும் இருட்டறையும் பூண்ட வருத்தமான விலங்கும் மகா பயங்கரமானதாய் இனிமேல் வரும் நித்திய நரக இருளுக்கும் அக்கினிக்கும் ஒரு முன் குறியாய் இருக்கின்றது. கேடுள்ளவனாகிய நான் என்ன செய்வேன். சகிக்கக்கூடாத இந்த இக்கட்டில் இருக்கிறேனே. காலதாமதம்பண்ணாமல் என்னை வந்து பாருமேன். மரணத்தினாலே நாம் ஒருவரை விட்டொருவர் பிரியுமுன்னமே ஒருதரமாகிலும் உம்மைக் கண்டுகொள்ள விரும்புகிறேன். தூக்குகிற இடத்திலிருந்து வரும்பொழுது நீர் எனக்குச் சொன்ன புத்திகளையும் பலபல துக்கமான காரியங்களுடனே கூட நினைவு கூருகிறேன். நான் வீட்டுக்கு வந்த பின் அன்றிரவிலே அது என் மனதிலே நன்றாய் அழுந்தியிருந்தது. ஆகிலும் மற்றநாள் என் பொல்லாத கூட்டாளிகளுடனே, போய்க் கூடினதினால் அதை மறந்து என் மனமும் முன்போலே கடினமுள்ளதாய்ப் போய்விட்டது. ஆ! என் சீவன் அதிசீக்கிரமாய்ப் பறப்படப் போகின்றது. மரணமும் நியாயத்தீர்ப்பும் நித்திய மறுமையும் மகா பயங்கரமான உருபாய்த் தோன்றுகின்றது. தரிக்கக் கூடாத ஆவலுடனே உம்முடைய வரவைக் காத்திருக்கிறேன் என்பதே.

இந்தக் காகிதம் என் கையில் வந்தவுடனே
அவனிடத்திற்குப் புறப்பட்டுப் போனேன். ஒ
ருவரையொருவர் கண்டவுடனே நெடுநேரமா
க இருவரும் வாய் திறந்து பேசக்கூடாதபடி வி
யாகுலப்பட்டு நிற்கப் பின்பு அவன் தான் என்
சிநேகிதனே, மகா பயங்கரமான எனது நிலை
பரத்தைக் கண்டீரே. நான் என்றைக்குங் கெ
ட்டுப்போனவன் தான். என் காரியம் முடிந்த
து என்றான். நான் அவன் மனதை ஆராயும்
பொழுது யாதொரு பற்றும் இல்லாமல் தளம்
பிக்கொண்டு பதறுகிறதாயிருந்தது. அவனுக்
கு நான் உண்மையான குணப்படுதல் இன்ன
தென்று விரித்துச் சொல்லிக் கருத்தராகிய இ
யேசுக்கிறிஸ்து பாவிகளுக்கு இரட்சகரென்று
விளங்கக் காட்டிப் பாவ மன்னிப்பைப் பெற்
றுப் பராபரனிடத்திற் சேர்வதற்கு அவரை
யே விசுவாசிக்கவேண்டுமென்றும் புத்தி சொ
ல்னேன். பின்பும் பலதரம் அவனுடனே கரு
த்தாவை நோக்கி வேண்டுதல் செய்து உலகத்
தாருடைய பாவங்களை நீக்குகிறதற்குப் பலியா
ன தேவ ஆட்டுக்குட்டியைப் பற்றிக்கொள்வா
யாகவென்று சொல்லிவிட்டு வந்தேன். சிலநா
ளிலே அவனுந் தூக்கப்பட்டான். அப்பால்
அவனுக்கு ஒரு வாழ்வு கிடைத்ததோ தெரியா
து. துற்கிரியைக்குத்தக்க நியாயத்தீர்ப்புச் சீக்
கிரம் நடவாதபடியால் மனிதருடைய இருத
யம் தங்களுக்குள்ளே பொல்லாங்கைச் செய்
ய நிறையப்படும் என்று சாலோமோன் சொ
ல்லிய வாக்கியப்படி இந்த நிற்பந்தருள்ள மனி

தனிடத்திற் பயங்கரப்படத்தக்க அத்தாட்சிக
ண்டேன். இப்படி இவன் பலமுறையிலும் எ
ச்சரித்துப் புத்திசொல்லப்பட்டாலும் மனம்
இளகாதவனுய்க் கடினங்கொண்டு நடந்து க
டைசியிலே அழிவுக்கு உட்பட்டான்.

இப்பால் என் நிலைபரமோ முன்னையில் மிக
வும் விரும்பத்தக்கதாயிருக்கின்றது. கிறிஸ்து
நாதருடைய நுகத்தடி மெதுவாயும் அவர் எ
ற்றுஞ் சுமை இலகுவாயும் இருக்கிறது. அவை
களை நான் சுமந்துகொண்டதினுல் உறுதியாகச்
சொல்லுகிறேன். இந்த வழியிலே நடந்து த
னிமையிலுங் கூட்டத்திலும் நான் பெறுகிற ச
ந்தோஷம் மிகுதியாயிருக்கின்றது. இந்த உலக
முழுதையும் பெற்றாலும் இந்நிலையைவிட்டு மா
றேன். பராபரனுடைய தாசர்களுடனே கூடி
யிருப்பதையே விரும்புகிறேன். நான் அவர்க
ளுடனே மிகுதியும் ஐக்கமாய்க் கொண்டாடு
வதுமன்றி அவர்களுடனே இருந்து எனது நா
ட்களை எல்லாங் கழிக்கவுந் தீர்மானித்துக்கொ
ண்டேன். அவர்கள் கூட்டத்திலே சேரவும்
அவர்கள் வணங்குங் கருத்தாவையே வணங்க
வுங் கடவேனுக.

மேலும் வேதப்புரட்டான புத்தகங்களை வா
சித்தால் எனக்கு முன் இந்தச் சீர்கேடு வந்த
தென்பதை எண்ணி அப்படிப்பட்டவைகளை
எவர்களென்றாலும் வாசியாதபடி கருத்தாகவு
ம் உறுதியாகவும் எச்சரிக்கிறேன். அப்படிப்
பட்ட புத்தகங்களை வாசித்துத் துன்மார்க்க
மாய் நடந்தவர்களில் ஒருவனுடைய மரணவே

ளையிலே நான் கூட இருந்து கண்ணாற் கண்ட
காரியத்தைச் சொல்லுகிறேன். அவன் வீட்டுக்
குள் நான் போனபொழுது அவனுடைய குற்ற
முள்ள மனதிலிருந்த பெரிய அச்சத்தை வியா
குலத்தினாலே கோட்டரவு அடந்த முகங் கா
ட்டினதைக் கண்டு மிகுதியும் ஆச்சரியப்பட்
டு உனது உணர்ச்சி என்னவாயிருக்கின்றதென்
று ஆராய்ந்ததற்கு முழுதும் நிர்ப்பந்தமுங்
கேடுமாயிருக்கின்றதென்று சொன்னான். கிறி
ஸ்துவேதத்தைப்பற்றி அவன் கொண்டிருந்த
அவிசுவாசமான எண்ணம் அடாத்துந் தீமை
யானதும் என்று காட்டும்படி அவனை நோக்கி
நரகம் இல்லையென்று உனது நம்பிக்கையினால்
இந்த மரணவேளையில் உனக்கு ஏதும் ஆறுதல்
கிடைக்கவில்லையா என்றதற்கு அவன் இல்லை
யென்று சொல்லிச் சற்றுநேரம் பொறுத்து
ஐயையோ! என்னைக் கெடுக்க நினைத்த பொல்
லாதவர்களுடைய கெடு புத்தியைக் கேட்டு நட
ந்தவனாகிய என்னைப்போலும் பாவி உலகத்தி
ல் இல்லையென்பது நிச்சயம். நரகம் உண்டெ
ன்பதை ஒரு நகைப்பாக எண்ணின நான் அந்
நரகத்திலே இப்பொழுது போகிறதற்கு நீதி
ப்படி தீர்க்கப்பட்டேனென்றான். அவன் இப்
படியே திட்டமாகச் சொன்ன சொல் என் ம
னதை விட்டு எடுபடாமல் மிகுதியும் அழுந்தி
யிருந்தது.

அப்புறம் பராபரன் பாவிகள் மேற் கொண்
டிருக்கிற இரக்கத்தைக் காட்டிப் பேசினபொ
ழுது அவன் அதி சீக்கிரமாய் என் பேச்சைத்

தடுத்தப் பாவ உணர்ச்சியும் அதினால் வரும் மனஸ்தாபமும் என் இருதயத்திற் சற்றுமில்லை. நித்தியத்திற்கும் உள்ள நரகவேதனையின் பயமே என் நெஞ்சில் உலாவிக்கொண்டு இருக்கின்றது. நரகவாஸிகள் படும் வருத்தத்திற்கு இந்த வேதனை ஒரு முன்னீடும் முன் அறிதலாயாயிருக்கிறது. ஆ! நித்திய நெருப்பு, நித்திய நெருப்பு. நித்திய தீச்சுவாலைக்குள்ளே இருக்கக் கூடியவனார்? சாகிறதற்குத் துணியக் கூடாது. ஆகிலுஞ் சாகாமல் இருக்கவுங்கூடாதே! ஒரு நாளென்கிலும் பிழைத்திருக்கவே வேணும்! அது என் விருப்பத்தின்படி நடவாதே! நடந்தாலும் அதினால் ஒன்றும் ஆகமாட்டாதே! நான் நித்திய கேட்டில் விழுவதற்கு என் மனதை உடன்படுத்த வேணுமே! சாகிறேனே! சாகிறேனே! என்று வாய் விட்டுப் புலம்பினான்.

இப்படியே புலம்பிப் பின்பு சற்றே அமைதியாய் இருப்பதைக் கண்டு என் வீட்டுக்கு ஓடிப் போய் ஒரு பெரிய மனிதனுடைய மரண காரியங்களை எழுதிய ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து அவன் அறைக்கு உள்ளே போய்ச் சமயம் பார்த்திருந்து வாசித்தேன்.

அந்தப் பெரிய மனிதனும் இவனைப் போலே வேதமெல்லாம் பொய்யென்றும் மோட்ச நரகம் இல்லையென்றுஞ் சொல்லித் தமது இச்சைப்படி பொல்லாங்கிலே நடந்து வந்து மரண காலத்திலே தாங் கொண்டிருந்த எண்ணங்கள் எல்லாம் பழுதென்று தள்ளித் திகி

து வேதத்தைக் கைக்கொண்டு அதிலே தாம்
வைத்த விசுவாசம் எவருக்கும் விளங்கும்படி
உறுதிப்படுத்தி அச்சடித்துப் பிரசித்தம்பண்
ணும்படி கட்டளை இட்டார்.

இவருடைய காரியத்தை நான் வாசிக்கும்
பொழுது அவன் மிகவும் உற்றுக் கேட்டான்.
அதை முடித்த உடனே பின்னுங் கலக்கம் பி
டித்தவனாய் வாய் விட்டுக் குளறிப் பாருங்க
ள், பாருங்கள். அவர்களை நீங்கள் காணவில்லை
யோ! என்னைக் கொண்டு போக வந்துவிட்டா
ர்கள்! என்னைத் தப்புவியுங்கள்! தப்புவியுங்க
ள்! நான் என் பாவத்தினாலே உரிமைப்படுத்
திக்கொண்ட நரகத்துக்குப் போகிறேன். ஆ
ண்டவர் என்னைக் கோபிக்கிறார். நான் எங்கே
போய் ஒளிப்பேன்? நான் தாழுகிறேன். நா
ன் போகிறேன். என்றென்றைக்கும் நரகவா
ளியாய்ப் போகிறேன், நரகவாளியாய்ப் போ
கிறேன்! என்று புலம்பிக்கொண்டு நரக பயந்
தானே அவன் முகத்தில் மிகவுந் தோன்றத்த
க்கதாகச் செத்துவிட்டான்.

இதை வாசிக்கிறவர்களே, உங்கள் சுவாசம்
ஒடுங்கிப் போகிற வேளை வருமென்று எண்ணு
ங்கள். அது இன்றைக்கு வந்துவிட்டால் நீங்
கள் பராபரனுக்கு முன்னே போய் நிற்க ஆ
யத்தப்பட்டவர்களாய் இருக்கிறீர்களோ? ஆ!
இன்று இந்தக் காரியங்களைச் சிந்தித்து உங்க
ளைத்தானே ஆராய்ந்து பாருங்கள். கருத்த
ராகிய இயேசுநாதரைத் தாழ்மையோடும் பய
பத்தியோடும் பின்பற்றி அவருக்கு உகந்தவர்

களாய் நடக்கத் தேடுகிறீர்களோ? அல்லது ஒ
ரு பொழுதென்கிலும் உங்கள் ஆத்துமாவை
யும் மரணத்தையும் பராபரனையும் மோட்ச
த்தையும் நரகத்தையுஞ் சிந்தியாமல் மறுமை
ப் பேற்றைத் தேடவேண்டிய இந்த நற் சம
யத்தை உலக சிந்தனையிலும் பாவத்திலுஞ் செ
லுத்துகிறீர்களோ? இந்த வசனங்கள் உங்களு
க்கு எச்சரிப்பான புத்தியாய் இருப்பதாக.
பாவத்தின் மேற் பாவத்தையும் நிற்பந்தத்தி
ன் மேல் நிற்பந்தத்தையுங் கூட்டிக்கொள்ள
நியமித்துக்கொண்டீர்களோ? நீங்கள் இப்ப
டிப்பட்ட நடையுள்ளவர்களாய் இருப்பதினாற்
கேட்டிலே கொண்டுபோய்ச் சேர்க்கிற அக
ன்ற வழியில் நடந்து பராபரனுடைய உக்கி
ர கோபம் மிகுந்திருக்குந் நீதித் தீர்ப்பின் நா
ளில் அவருடைய கோபத்தையே உங்கள் மே
ல் அதிகப்படுத்தி வைத்துக்கொண்டீர்கள் எ
ன்று நினைத்திருங்கள். ஆ! புத்தி உள்ளவர்க
ளாய் இருங்கள். மரணம் இன்றைக்கு வரவுங்
கூடுமே. வந்தால் இந்தக் காரியங்களைப் பார்
க்கச் சமயங் கிடைக்குமோ. ஆ! பின்னை இப்
பொழுதே புத்தி உள்ளவர்களாய் இருங்கள்.

இரட்சிப்புப் பெறுவதற்கு இன்று தானே
ஏற்ற நற்சமயம். இந்நேரமே கருத்தாவைத்
தேடினால் அவருடைய இரக்கத்தைக் கண்ட
டையலாம். இந்த விசேஷித்த காரியத்தை
இந்நேரஞ் செய்யாமல் விட்டுவிட்டால் அந்
தத் தேவ இரக்கத்தைப் பெற வழியின்றி இற
ந்து நரகத்தில் விழக் கூடியதாய் இருக்கும்.

ஆ! உங்களுக்காகப் பாடுபட்டு மரணமடைந்த இரட்சகரை நினையுங்கள். அவருடைய திரு இரத்தமே உங்கள் பாவத்தைச் சுத்திகரித்து உங்கள் ஆத்துமாவை இரட்சிக்கக் கூடியது. அவருடைய பாதத்திலே விழுந்து ஆண்டவரே, பாவியாகிய என்மேல் இரங்கியருளும் என்று முழு மனதுடனே சொல்லி மன்றாடுங்கள். பாவிகளை இரட்சிக்கிறதற்கு இடாகத் தமது சீவனை ஒப்புக் கொடுத்த பராபரனுடைய நேசகுமாரனாகிய கிறிஸ்துநாதரை விசுவாசியுங்கள். பராபரனுடைய சுவிசேஷத்தைக் கைக்கொண்டு உங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையுங் காலத்தையும் மற்றுள்ளவைகளையும் அவருடைய கையிலே நேர்ந்து வையுங்கள். அப்பொழுது நித்திய மோட்சம் உங்கள் கண்ணுக்கு முன்னே தெளிவாகத் தோன்றத்தக்கதாய் நீங்கள் மரணமே, உன் முனை எங்கே! பாதாளமே, உன் சயமெங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே நமக்குச் சயங் கொடுத்திருக்கிற பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக என்று சந்தோஷித்துடனே சொல்லக் கூடியதாய் இருக்கும்.

முற்றிற்று.